Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 3, Issue - 1, November 2023 E-ISSN: 2583-0481

# Culture of the Palai People in Sangam Literature

**A. Babu,** Tamil Research Scholar, Srimath Sivagana Balaswamigal Tamil Arts Science College, Mailam, Thiruvalluvar University, Vellore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0002-6483-439X
**Dr. S. Thirunavukarasu,** Research Guide & Associate Professor of Tamil, Srimath Sivagana Balaswamigal Tamil Arts Science College, Mailam, Thiruvalluvar University, Vellore, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0009-1920-2132
**DOI: 10.5281/zenodo.10389542**
**Received:** 15 July 2023; **Revised:** 12 August 2023; **Accepted:** 30 August 2023; **Available online:** 26 November 2023.

## Abstract

*The Palai people played an important role in the Sangam era, which was an ancient period of Tamil literature in South India. This paper aims to highlight the important aspects of the culture of the Palai people as portrayed in Sangam literature. The culture of the Palai people was deeply rooted in their agricultural lifestyle. They were primarily farmers who cultivated lands, grew crops, and reared livestock. They had extensive knowledge of irrigation techniques, crop patterns, and seasonal weather changes. Their prosperity depended on the productivity of their fields, and they displayed a strong connection with the earth and nature. In short, the culture of the Palai people in Sangam literature is devoted to their agricultural lifestyle, emphasis on family and community, devotion to gods, music and dance, traditional attire, and the lasting impact in literary contributions. This article chiefly scrutinizes the Palai land's geographical location, Palai people and their lifestyle, love and elopement, the mindset of the bride's mother and bride's friend, hunting, food style, hospitality, faiths and beliefs of Palai people, oracle hearing, worship methods and musical Instruments. Hence, the main objective of this study is to examine how the Sangam literature reflects the different characteristics of the Palai people from authentic resources.*

**Keywords:** Sangam Literature, Palai (Desert), People, Cultures.

## References

[1] Ramaiyapillai, (U.A.). *Natrinai.* Vardhamanan Pathipagam, Chennai - 600017.
[2] Somasundaram, (U.A.). *Kurunthogai.* Kazhaga Veliyutu, Chennai.
[3] Tamiḻaṇṇal. *Tolkappiyam Mulamum Karutturaiyum*. Meenakshi Puththaga Nilaiyam, Chennai, 2009.
[4] Duraisamipillai, S. *Ingurunooru.* Annamalai University, Chidambaram.
[5] Malini, S. *Sanga Ilakkiyathil Makkal Olugalarugal.* Doctoral Thesis, Thiruvalluvar University, Vellore, 2020.
[6] Viswanathan, (UP). *Kalithogai*. Kazhaga Veliyutu, Chennai - 10, 2007.
[7] Jeyapaul. R. *Akananooru.* New Century Book House, Chennai, 2007.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 3, இதழ் - 1, கார்த்திகை 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சங்க இலக்கியத்தில் பாலைநில மக்கள் ஒழுகலாறுகள்

**அ. பாபு,** தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரி, மயிலம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0002-6483-439X
**முனைவர் ச. திருநாவுக்கரசு,** இணைப்பேராசிரியர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை அறிவியல் கல்லூரி, மயிலம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0009-1920-2132
**DOI: DOI: 10.5281/zenodo.10389542**

**ஆய்வுச்சுருக்கம்**

*தென்னிந்தியாவில் தமிழ் இலக்கியத்தின் பண்டைய காலகட்டமாக இருந்த சங்க காலத்தில் பாலை மக்கள் முக்கிய பங்கு வகித்தனர். இக்கட்டுரையானது சங்க இலக்கியங்களில் சித்தரிக்கப்பட்ட பாலை மக்களின் கலாச்சாரத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பாலை மக்களின் கலாச்சாரம் அவர்களின் விவசாய வாழ்வில் ஆழமாக வேரூன்றி இருந்தது. அவர்கள் முதன்மையாக நிலங்களை பயிரிட்டு, பயிர்களை வளர்த்து, கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகள். நீர்ப்பாசன நுட்பங்கள், பயிர் முறைகள் மற்றும் பருவகால வானிலை மாற்றங்கள் பற்றிய விரிவான அறிவு அவர்களுக்கு இருந்தது. அவர்களின் செழிப்பு அவர்களின் வயல்களின் உற்பத்தித்திறனைப் பொறுத்தது, மேலும், அவை பூமி மற்றும் இயற்கையுடன் வலுவான தொடர்பைக் காட்டுகின்றன. சுருக்கமாக, சங்க இலக்கியங்களில் பாலை மக்களின் கலாச்சாரம் அவர்களின் விவசாய வாழ்க்கை முறை, குடும்பம் மற்றும் சமூகத்தின் மீதான முக்கியத்துவம், கடவுள் பக்தி, இசை மற்றும் நடனம், பாரம்பரிய உடைகள் மற்றும் இலக்கிய பங்களிப்புகளில் நீடித்த தாக்கம் ஆகியவற்றிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையானது பாலை நிலத்தின் புவியியல் அமைவிடம், பாலை மக்கள் மற்றும் அவர்களது வாழ்க்கை முறை, காதல் மற்றும் வீட்டை விட்டு ஓடுதல், பெண்ணின் தாய் மற்றும் தோழியின் மனநிலை, வேட்டையாடுதல், உணவு முறை, விருந்தோம்பல், பாலை மக்களின் நம்பிக்கைகள், குறி கேட்டல், வழிபாட்டு முறைகள் மற்றும் இசை கருவிகள் ஆகியவற்றை தழுவிய பாரிய ஆய்வினை நிகழ்த்துகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** சங்க இலக்கியம், பாலைநிலம், மக்கள், ஒழுகலாறுகள்.

**முன்னுரை**

சங்க இலக்கியம் மக்களின் அகம், புறம், வாழ்க்கையினைப் பற்றி அறிய உறுதுணையாக உள்ளது. அவற்றுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணையும் அகவாழ்வின் இயல்புகளை எடுத்து இயம்புகின்றன. ஓரிடத்தில் தங்கி நிலைத்து

வாழ்ந்த கூட்டு வாழ்க்கை முறையே நில பாகுபாடிற்கு அடித்தளதாக அமைந்தது எனலாம். அவ்வகையில் நிலம் மையப்படுத்தப்பட்டு வாழ்விற்கு அடிப்படைத் தேவையான உணவு உற்பத்திக்கு அடிப்படையாக விளங்கியது எனலாம். அவ்வாறு அமைந்த நிலப்பின்புலத்தில் மக்களின் பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், உணவுமுறைகள், ஆடை, அணிகலன்கள் ஆகிய பண்புகள் மக்களிடையே நிலைபெறத் தோன்றியது. இப்பாகுப்பாட்டின் அடிப்படையல் மக்களின் பண்புகள் வேறுபட்டதை இலக்கியம் காலக் கண்ணாடிப் போன்று பிரதிபலிப்பதை சங்க இலக்கியத்தின் வழி எவ்வாறு காட்டப்பட்டுள்ளன என்பதைப் பற்றி ஆராய்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

**நிலப்பகுதி**

நிலம் மக்களின் வாழ்வாதார அமைவிடமாகும். அந்நிலப்பகுதி இயற்கை சூழலுக்கு ஏற்பவும், மக்களின் வாழ்க்கைத் திறனுக்கு ஏற்பவும், வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிலப்பகுதியைக் தொல்காப்பியர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நால்வகைத் திணையாக வகைப்படுத்தியுள்ளர். இதனை, **வேந்தன் மேய தீம்புனல் உலகமும் (தொல். பொருள். அகம்., நூ. 5)** என்ற நூற்பா வழிக்கூறுகிறர். ஆடு, மாடுகளை மேய்த்து வாழும் ஆயர் குலமக்கள் வாழ்கின்ற நிலப்பகுதியை முல்லை நிலமென்றும், இயற்கையோடு இயற்கையாக கலந்த நிலையில் மக்கள் வாழும் நிலப்பகுதி குறிஞ்சி நிலம் என்றும், உழவுத் தொழில் சிறக்க நீராதரமாய் விளங்கும் வயற்பகுதியில் மக்கள் வளமாக வாழ்வதால் மருதநிலம் என்வும், மீன்படித் தொழிலுடன் பிறநாட்டுடன் வாணிபத் தொடர்புகொள்ள ஏதுவாக அமைந்த கடற்கரைப் பகுதியை நெய்தல் நிலமென்றும் நிலவியலைத் தொல்காப்பியர் பாகுபடுத்தியுள்ளார்.

**பாலை நிலப்பொழுதுகள்**

பாலைத்திணைக்கு உரிய நிலம் சுரமும் சுரம் சார்ந்த பகுதியாகும். பாலைக்கூறிய பொழுதுகள் இளவேனில் மற்றும் முதுவேனிலும் பாலை நிலத்திற்குறியபெரும் சிறுபொழுதாக நண்பகல் நேரம் எனச் சுட்டுகின்றனர். நண்பகல் என்பது பகல் 12.00 மணியாகும்.

**பாலைநில மக்கள்**

பாலை நில மக்கள் மணலும் மணல் சார்ந்தப் பகுதியில் வாழ்ந்தனர் அவர்கள் எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர், மீளி, விடலை, காளை, போன்ற பெயர்களை நச்சினார்கினியர் குறிப்பிடுகிறார். எயினர், இறுக்கர், புள்ளுவர், விராதர், மறவோர், பாலையர், எயிற்றி, மறத்தி, மீளி, விடலை, காளை என நவதீப நிகண்டு குறிப்பிடுகிறது. இவ்வாறு உரையாசிரியர்களிடையேயும். நிகண்டுகளிலையேயும் மாறுபடுவதைக் காணமுடிகிறது.

**பாலைத்திணை மக்கள் ஒழுக்கலாறுகள்**

பாலைநிலத்தின் ஒழுக்கமானது பிரிதலும் பிரிதல் நிமிர்தமும் ஆகும். இலக்கியத்தில் பாலை நிலத்தின் வருணைகாட்டும் பொழுது அந்நிலத்து மக்களுக்கு நிகழ்வனவாக சுட்டிக் காட்டுவது குறைவாகவே உள்ளன. அந்நிலத்தை கடந்து செல்லும் பொழுது தலைவன்,

அல்லது தலைவி வறுத்தப்படுவதாக கூற்று நிகழும் இடத்தில் காட்டப்படுவதை பெரும்பாலும் இலக்கியத்தில் காணப்படுகிறது. அவற்றை உடன் போக்கில் நிகழும் நிகழ்வுகள், உடன் போக்கை எண்ணி நற்றாய் வருந்துதல், செவிலியானவள் தன்மகளைத் தேடி செல்லும் நிகழ்வு, தலைவன் தலைவியை எண்ணி செலவினை சிறிது காலம் தள்ளிவைத்தல், தலைவியை ஆற்றுவித்தல் போன்ற செயல்கள் பாலை நிலத்தின் காட்சி பின்புலத்தில் கவிஞர்களால் படைக்கப்படுவதை காணமுடிகிறது.

**உடன்போக்கு**

தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு உடன் போக்கு செல்ல விழைந்தான் அவன் அழைத்துக் கொண்டு செல்லும் பாலை வழியின் தன்மையை மனதில் நினைத்து வருத்தம் ஏற்பட்டாலும் தலைவியை அழைத்துக் கொண்டு உடன்போக்கு செல்ல விழைந்தான் என்று பாலை நிலத்தின் கொடுமையை சுட்டுவதை இலக்கியத்தில் காணமுடிகிறது.

**உடன் போக்கில் செவிலியின் நிலை**

தலைவன் தலைவியின் களவில் இடையூரு ஏற்பட்ட இடத்தில் தலைவனும் தலைவியும் உடன்போக்கு சென்றுவிட்டனர்.செவிலித்தாய் தன்மகளை தேடிக் காட்டின் வழி செல்லும் வழியின் காண்போரைக் கேட்கும் தன்மை பாலை நில பாடல்களில் பெரும் பாலும் காணமுடிகிறது.

**உடன் போக்கில் நற்றாய் நிலைபாடுகள்**

உடன் போக்கு நிகழ்தவிடத்து தலைவனும் தலைவியும் உடன் போக்கு சென்றுவிட்டதனால் நற்றாய் தன்மகள் விளையாடிய பொருள்களை எல்லாம் பார்த்து வருந்துவதாக உள்ளன. என்னுடைய மகள் செல்லும் பாதையின் கொடுமை எவ்வளவு ஆபத்தானது என்று வருந்தும் தன்மையை,

**சென்றனள் மன்ற என் மகளே**
**பந்தும்பாவையும் கழங்கும் எனக்கு ஒழித்தே (ஐங்குறுநூறு, பா. 377)**

எனும் பாடல்வரிகள் சுட்டுவதை காணலாம்.

**கூட்டுண்ணும் வாழ்கைமுறை**

வேட்டைத் தொழிலில் பாலை நில மக்கள் மறவர்கள் தங்களுக்குக் கிடைத்த விலங்குகளின் இறைச்சியையோ, பறவைகளின் இறைச்சியையோ ஆரலைத்துப் பெறப்பட்டனவற்றையோ தன்னுடைய வீட்டு மக்களுக்கும் தன்னைசார்தவர்களுக்கும் பகுத்து கொடுத்தனர். இத்தகு பகுத்துண்ணும் மரபு தொன்மையாகப் பாலை நில மக்களின் வாழ்வில் காணப்பட்டன. இதனை,

**படுசுடர் அடைந்த பகுவாய் நெடுவரை**
**முரம்புசேர் சிறுகுடி பரந்த மாலைப்**
**புலம்பு கூட்டுண்ணும் புல்லென் மன்றத்து (நற்றிணை, பா. 33)**

எனும் பாடல் வரிகளால் பாலை நில மக்கள் பகுத்துண்ணும் தன்மையைப் பெற்றிருந்தனர் எனும் செய்தியை அறியவாம்.

**பாலை நில மக்களின் வாழ்விடம்**

பாலைநில மக்கள் புல்லால் வேயப்பட்ட குடில்களில் வசித்தனர். இவர்களின் குடில்களை சங்க இலக்கியத்தில் **குரம்பை** எனும் பெயரில் அழைக்கப்படுகிறது. இதனை,

**கல்சேர்பு இருந்த கதுவாய்க் குரம்பை (அகநானூறு, பா. 129)**

**படலைப் பந்தர்ப் புல்வேள் குரம்பை (அகநானூறு, பா. 87)**

**பழூர்க் குரம்பையில் தோன்றும் (அகநானூறு, பா. 229)**

எனும் பாடற்பகுதிகள் மேலே புல்வேயப்பட்ட அவர்களின் குடிலைக் காட்டுகிறது.

**வேட்டையாடுதல்**

வாழ்க்கையில் வழி பறிமட்டும் செய்து வந்த பாலை நில மக்கள் உணவிற்காக விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடத் தொடங்கினர். பறவைகளை தன்னுடை கையில் உள்ள பொருள்களை வைத்து வேட்டையாடாமல் வேட்டைக்கு என்றே தனியாக பறவையை தயார் செய்து அவற்றுக்கு பயிற்சியும் கொடுத்து வேட்டையாடிய செய்தியை இலக்கியத்தில் காணமுடிகிறது. இதனை,

**சிறைகுவிந்த இருந்த பைதல் வெண்குருகு**

**பார்வை வேட்டுவன் காழ்களைந்த அருள் (நற்றிணை, பா. 252)**

எனும் பாடல் வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**பாலை நில மக்களின் உணவுமுறைகள்**

பாலை நிலமக்கள் வேட்டையாடிய விலங்குகளின் இறைச்சியைப் புழுக்கியும் சுட்டும் உண்டனர். கூழ் அவர்களின் முக்கிய உணவாக இருந்துள்ளன. மேலும், பழ வகையில் விளாம் பழத்தை உணவாக உட்கொண்டுள்ளனர். மேலும் வருமை நிலையிலும் வறட்சிக்காலங்களிலும் பருத்தி கொட்டைப் புண்ணாக்கை உணவாக உண்ட செய்தியும் இலக்கியத்தில் காணமுடிகிறது அவை,

**ஒலிகழை நெல்லின் அரிசியோடு ஓராங்கு**

**வால்நிணம் உருக்கிய வாஅல் வெண்சோறு (அகநானூறு, பா. 107)**

எனும் பாடலடிகள் மூலம் இறைச்சியோடு வெண்சோறு சமைத்து பாலை நில மக்கள் உண்டச்செய்தியை அறிய முடிகிறது. பாலை நில மக்கள் தாம் வேட்டையின் மூலம் பெற்ற இறைச்சியை புழுக்கி உண்டுள்ளனர். தற்பொழுது பேச்சி வழக்கில் (அவித்தல்) எனும் சொற் பொருண்மைக்கு மாறியுள்ளன. இதனை, **உவலைக் கண்ணியர் ஊன்புழுக்கு அயரும் (அகநானூறு, பா. 158)** எனும்பாடல் அடியின் வழி அறிந்து கொள்ளலாம். மேலும் பாலை நிலமக்கள் சுடப்பட்ட இறைச்சியையும் உண்டுள்ள செய்தியை இலக்கியத்தில் காணமுடிகிறது. இதனை, **கலிகெழு மறவர்காழ்க் கோத்து ஒழிந்ததை (அகநானூறு, பா. 169)** எனும் பாடல் வரிகள் மூலம் நெருப்பினில் கோலில் கோத்து இறைச்சியை சுட்டுச் தின்ற

செய்தியை அறிந்து கொள்ள முடிகிறது. மற்றும் வருமை காலத்தில் பருத்தி புண்ணாக்கை உண்ட செய்தியை,

**தாழிமுதல் கலித்த கோழிலைப் பருத்திப்**
**போத்திவயிற்று இளங்காய்ப் பேடை ஊட்டிப்**
**போகில்பிளந் திட்ட போங்கலி வெண்காழ்**
**நல்கூர்பெண்டிர் அல்கல் கூட்டும் (அகநானூறு, பா. 129)**

எனும் பாடல் வரிகளால் அறிந்து கொள்ளலாம். பாலை நில மக்கள் உணவினை உட்கொள்ள பனை ஓலையால் ஆன குடையை பயன்படுத்தியுள்ள செய்தியை இலக்கியத்தில் காணமுடிகிறது. இதனை, **சோறு பொதி வெண்குடை (அகநானூறு, பா. 121)** எனும் பாடல் வரிகளால் அறிந்து கொள்ளலாம்.

**பாலை நில மக்கிளின் நம்பிக்கைகள்**

பாலை நிலக்களிடம பல்வேறு நம்பிக்கைகள் காணப்பட்டன.இயற்கையின் செயல்பாட்டை உணர இயலாத போது மக்கள் தங்கள் முன்னோர்கள் கூறிய நம்பிக்கையை கடைப்பிடித்து அவர்ளுக்கு ஏற்படும் ஆபத்தில் இருந்து தன்னை காத்துக் கொள்வதாக எண்ணிக்கொண்டனர். அவ்வழியில் பாலைத்திணைமக்கள் விரிச்சி கேட்டல் பல்லி நிமிர்த்தம் புள்நிமிர்தம்,காக்கை கரைதல் நால்கோல் நம்பிக்கை பேய்நம்பிகை காக்கைக்கு பலியிடல் போன்ற நம்பிக்கைகள் பாலை நில மக்களிடம் காணப்பட்டது.

**விரிச்சி கேட்டல்**

நற்சொல் கேட்டலுக்கு விரிச்சி கேட்டல் என்று பெயர் தொலகாப்பியமும் விரிச்சி எனும் செய்தியை கூறுகிறது. பாலை நிலமக்கள் நற்செயலைத் தொடங்கும்பொழுதோ. அல்லது அச்செயலைப்பற்றிப் பேசும்பொழுதோ எதிர்படாத பொழுது அல்லது எதிர்படாத இடத்தில் இருந்து மங்கல ஒலிக்கேட்டால் அவர்கள் மேற்கொண்ட செயல் நன்மையில் முடியும் என்று நம்பினர் மேலும் அம்முயற்சி மெற்கொள்ளும் பொழுது தாம் மேற்கொண்ட முயற்சி நன்மையில் முடியுமா என்று கூறிக் கேட்கும் தன்மையும் தன்னைவருத்தும் துன்பம் எப்பொழுது முடியும்என்று குறிக் கேட்கும் தன்மையும் பாலை நில மக்களிடத்தில் காணப்பட்டன. இதனை, **புள்ளும் ஓராம் வரிச்சியும் நில்லாம். (குறுந்தொகை, பா. 218)** எனும் பாடல் அடிகள்மூலம் பாலை நில மக்களிடம் விரிச்சி கேட்கும் பழக்கம் இருந்த செய்தியை அரிந்து கொள்ள முடிகிறது.

**புள் நிமிர்த்தம்**

இலக்கியத்தில் புள் எனும் சொல் பறவை எனும் பொருளையும் நிமிர்தம் எனும் பொருளையும் குறிக்கும். புள் நிமிர்தம்நல் நிமிர்தமாகவும் தீநிமிர்தமாகவும். அமையும் தன்மைக் கொண்டது. *தொல்காப்பியம்* நமிர்தம் பற்றிய செய்தியை கூறுகிறது.

**அச்சமும் உவகையும் எச்சம் இன்றி**
**நாளும் புள்ளும் பிறவற்றின் நிமிர்தமும் (தொல்., நூ. 7)**

எனும் நூற்பா வழி புள்நிமிர்தம் எவ்வாறு அமையும் என்பதை கூறுவதில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

**வழிபாடுகள்**

பாலைநிலக் கடவுளாகிய கொற்றைவையை மக்கள் வழிபட்டுள்ளனர் கொற்றவைபற்றிச் சங்க இலக்கியங்கள் தரும் செய்திகள் குறைவாக குறுந்தொகையில் **விறல்கெழு சூலி (218)** எனக் குறிக்கப் பெற்றது கொற்றவையே தமிழிலக்கியத்தில் கொற்றவை என்பதற்கு ஆறலைக்கள்வருக்குக் கொற்றம் தருபவள் வெற்றி தருபவல் என்ற பொருள் இருப்பதைக் காணலாம் பழங்கால வேட்டைத் தெய்வமே பின்னர் இப்படி மாறியிருக்கிறாள். உரோமனியரின் கன்னித் தேவதையான டையானாவும் வேட்டைத் தெய்வமே இவளே ஆற்றுத் துறைகளில் காவல் செய்வால் காட்டு விலங்குகளையும் வேட்டுவர்களையும் காப்பவர்களாக கருதப்பட்டாள் வில்லும் அம்பும் கையில் வைத்திருந்தாள் தலையில் பிறைநிலா அணிந்திருந்தாள் தமிழ் இலக்கியத்தில் வரும் கொற்றவையும் டையானவும் சில வற்றில் ஒற்றுமையுடன் திகழ்வதை காணமுடியும் பாலை நிலமக்களின் வேட்டைக்கு கொற்றம் தரும் கொற்றவையே பின்னர் வேந்தருக்கும் வீரர்க்கும் பொற்றம் தராவளாக கொண்டாடப்பட்டாள் இதனை

**விடர்லை அடுக்கத்து விறல்கெழு சூலிக்கும்**
**கடனும் பூணாம் (குறுந்தொகை, பா. 128)**

என்ற பாடலடிகள் விறல்கெழு சூலியாகிய கொற்றவையைக் காட்டுகின்றேன சூலப்படை ஏந்தியுள்ளாள் சூலி இவள் வெற்றியைத் தருபவள் என்பதும் அறியமுடிகிறது. இவையாவும் பாலை நில வழிபாடுகள் பற்றி அறியமுடிகிறது.

**பாலை நில இசைக்கருவிகள்**

பாலைநிலமறவர்கள் பம்பை, துடி, தண்ணுமை போன்ற தோற்கருவிகளை இசைத்தனர். கடுமையான ஓசையைத் தருகின்ற பம்பை எனும் இசைக்கருவி பாலை நில மக்களின் வழிபாட்டு கருவிகளில் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. அதனை,

**நரம்போடு கொள்ளும் அத்தத்து ஆங்கன்**
**கடுங்குரற் பம்பைத் கதநாய் வடுகர் (நற்றிணை, பா. 212)**

என்பன கடுடையான ஓசையைத் தருகின்ற பம்பை எனும் இசைக்கருவி ஒலித்தலைக் பாட்டுகிறன இக்கருவி பாலை நில பெருவழியில் இசைக்கப்பட்டுள்ளது என்பதனை,

**வருமுனை அலைத்த பெரும்புகல் வலத்தர்**
**கனைகுரல் கந்துடிப் பாணி தூங்கு (அகநானூறு, பா. 159)**

எனும் பாடல் அடிகள் பம்மை பயன்படுத்திய செய்தியை காட்டுவதை காணமுடிகிறது.

**முடிவுரை**

மக்களின் ஒழுக்கம் அவர்கள் வாழும் நிலத்திற்கு ஏற்ப அமைவதை சங்க இலக்கிய பாடல்வழி அறிந்து கொள்ள முடிகிறது. பாலை நிலத்திற்கு தனி நிலம் இல்லை என்பதால்

அந்நிலத்துக்கென்று தனி ஒழுக்கம் காணப்படவில்லை என்றாலும். துன்பம் நிறைந்த இடத்தை கூறக் கருதிய புலவர் எடுத்துக்கொள்ளும் நிலம் பாலை நிலம் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். பாலைநிலத்தின் மக்களின் தொழில், கடவுள், உணவு, போன்றவற்றை காணும் பொழுது பயத்தை தரும் காட்சியையே புலவர்கள் படைத்துள்ளனர். பாலை நில மக்களில் பெண்கள் ஆடவர்களுக்கு தொழிலில் உதவும் தன்மையினை காணமுடிகிறது. பாலை கொடிய வெயிலின் தாக்கம், நிழலில்லாமை, பசியின் கொடுமை, விலங்குகள் பசியால் படும் துன்பம் போன்றவை பாடலுக்கு சுவையும். தெளிவான காட்சிபிம்பத்தையும் காட்டுவதைக் காணமுடிகிறது.

**குறிப்புகள்**

[1] இராமையாபிள்ளை. (உ.ஆ) *நற்றிணை.* வர்தமானன் பதிப்பகம், சென்னை - 600017.
[2] சோமசுந்தரம். (உ.ஆ) *குறுந்தொகை* கழக வெளியிடு, சென்னை.
[3] தமிழண்ணல். *தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்.* மீனாட்சி புத்தக நிலையம், சென்னை, 2009.
[4] துரைசாமிப்பிள்ளை, சு. *ஐங்குறுநூறு.* அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.
[5] மாலினி, எஸ். *சங்க இலக்கியத்தில் மக்கள் ஒழுகலாறு.* முனைவர் பட்ட ஆய்வேடு, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர், 2020.
[6] விசுவநாதன், (உ.ஆ). *கலித்தொகை.* கழக வெளியீடு, சென்னை - 10, 2007.
[7] செயப்பால், ரா. *அகநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.